

"எனது வாழ்க்கையே எனது செய்தி"

மகாத்மாகாந்தி

# காந்தீயம்

இருதிங்கள் இதழ்

மலர் ~ 19 இதழ் ~ 2 2005~ ஜனவரி ~ 30 விலை: 10 /=



ஐப்பசி , 2,2004 காந்தி ஜயந்தி அன்று யாழ் நகர மத்தியிலுள்ள காந்திஜியின் உருவச்சிலைக்கு மில்க்வைற் தொழிலதிபர் சிவநேயர் தவகோபால் மாலை அணிகிறார்.

## சிறப்புற நடைபெற்ற காந்தி ஜெயந்தி தின விழா

மகாத்மா காந்தியின் 136 ஆவது பிறந்த தினமாகிய 2 – 10- 2004 அன்று அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினால் காந்தி ஜெயந்தி தின விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக அன்று காலை பத்துமணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்குக் காந்தியத் தொண்டர்கள் மாலை அணிவித்தனர். சங்கத் தலைவர் திரு சோ. க. தம்பிப்பிள்ளை, நிர்வாகசபை உறுப்பினர் எனப்பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பிற்பகல் மூன்று மணிக்கு குமாரசாமி வீதியிலுள்ள வேதாந்த மடத்தில் மாலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

இந்த நிகழ்ச்சிக்கு காந்தி சேவா சங்கத்தலைவர் தலைமை வகித்துப் பேசினார். அவர் தனது ஆரம்ப காலத்தில் உயிர்த்துடிப்புடன் இயங்கிய சங்கம் இடைக்காலத்தில் ஸ்தம்பித நிலை அடைந்தபோதும், தற்போது தன்னைப் புதிப்பித்துக் கொண்டு தன்னாலான பணிகளை ஆற்றத் தொடங்கியுள்ளது. இந்த வகையில் காந்தி ஜயந்தி தினமாகிய இன்று காந்தீயம் பத்திரிகை வெளியீட்டினைச் செய்கின்றது. தொடர்ந்து வரும் காலங்களில் மேலும் பல பணிகளைச் செய்யவுள்ளது எனக் குறிப்பிட்டார். அவரைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:

சிலப்பதிகாரத்தில், "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்" என்ற தொடர் உளது. அறமே வாழ்வின் அடிப்படை. அறநெறி பிழைத்தோரை அறத்தின் வன்மையான கூர் வெட்டியே தீரும். அவ்வாறு அறவழி நில்லாது அரசியற்றுவாருக்கு அடங்கிப் போவதும் அதர்மமே. அச்சம் உள்ளவன், தன் உயிரைப் பெரிதாக மதிப்பவன் உண்டிருந்து வாழவிரும்புவான். அச்சம் இல்லாதவன்,

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**

தன்னைத் தியாகம் செய்து சத்தியம் வெல்லப்போரிடுவான். அவன் போர் கத்தியின்றி ரத்தமின்றி நிகழ்வது. சத்தியத்தின் நித்தியத்தில் நம்பிக்கை உள்ள எவரும் அகிம்சைப் போராளி ஆகலாம். துறவிபோன்ற உள்ளமும் சமூக நலன் என்ற வேள்வியில் தன்னை அர்ப்பணிக்கும் தர்ம வீரமும் கைவரப்பெற்ற படியால் காந்திஜீயின் போர் உலகுக்கே ஒரு புதுமையாயிற்று.

"பிரித்தானியப் பேரரசில் சூரியன் அஸ்தமிப்பதில்லை" என்ற பெருமைக்கு முற்றுப் புள்ளி இடப்பட்டது. அவர் வழியில் இந்திய தேசிய காங்கிரஸ் நின்று, ஆசிய நாடுகளில் முதலாவதாக இந்தியாவுக்குச் சுதந்திரத்தை ஈட்டியது. இன்று வேறு சக்திகளும் சேர்ந்தே பாரத சுதந்திரத்தைத் துரிதப்படுத்தின என்று பேசுவோர் உளர். அவர்கள் பாமரராய் விலங்குகளாய்க் கிடந்த மக்களை, மனிதத் தன்மையும் விழிப்பும் உறச் செய்த அதியற்புத சாதனையை ஆற்றிய அந்தச் சின்னஞ் சிறிய மகாத்மாவை (Tiny, Little Mahatma) தம் அற்பமதியால் நோக்குகிறார்கள் என்றே எனக்குத் தோன்றுகின்றது. சரியான வரலாற்றுப் பார்வை (perspective) இல்லாதவர்கள் கூற்றே அது.

சர்வதேச ரீதியில் அவருடைய அகிம்சைப் போராட்டம் மதிப்புப் பெற்றுள்ளது. மனித கௌரவம் மறுக்கப்பட்ட, சமூக அடக்கு முறைக்குட்பட்ட, பல இனத்தவர்கள் அவரது முறையை ஏற்றனர். வெற்றியும் பெற்றனர். மாட்டின்லூதர் கிங் நல்ல உதாரணமாகும்.

மகாத்மாகாந்தி யாழ்/ இராமநாதன் கல்லூரியில் பேசிய பேச்சு மனத்தில் எழுகிறது. உரிமைகள் மறுக்கப்பட்ட பெண்ணினத்தை நவீன கல்வி வசதிகளைச் செய்து, பண்பும் அறிவும் மிக்கவர்களாக ஆக்கும் கல்வியை தந்த இராமநாதனின் தீர்க்க தரிசனத்தைப் பாராட்டினார். "நாங்கள் செய்ய நினைத்ததை இங்கு சாதனை செய்து காட்டி விட்டீர்களே" என்று வியப்புற்றார் தன் சிறு உதவியையும் அளித்தார்.

இலங்கையில் டொனமூர் ஆட்சிமுறைதொடங்கி மெல்ல மெல்ல உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் சட்ட ரீதியான ஒடுக்கு முறையும் ஆரம்பித்தபோது, செல்வநாயகம் அதனைச் சாத்துவிகவழியில் எதிர்த்தார். பாராளுமன்றத்தின் முகப்பில் சத்தியாக்கிரகம் போன்ற வெகுஜனப் போராட்டங்களைத் தொடங்கினார். ஆனால் தொடர்ந்து மக்கள் இயக்கமாக அதனைக்கட்டி எழுப்பத் தவறிவிட்டனர், பின் வந்த எம் அரசியல் தலைவர்கள். பாராளுமன்ற ஜனநாயக வேர்கள் இன்றி, வெஸ்ற்மின்ஸ்ரர் மாதிரியில் அரசமைப்பை மட்டும் வைத்துக் கொண்டு 'மக்களாட்சி' புரிந்தோர், சமய, இன, மொழி வெறியைத் தூண்டிச் சுயலாபம் பெற்ற அரசியல் வரலாறு, இறுதியில் ஆயுதப் போராட்டமாயிற்று. எம் தலைமையிலிருந்தோர் காந்திஜீயின் துறவு, தியாகம், எளிமை போன்றவற்றை இன்னும் அதிகமாகவிருத்தி செய்திருந்தால், எம் வரலாறு வேறு விதமாயிருந்திருக்கும்.



காந்தி ஜயந்தி தினத்தன்று யாழ்நகர மத்தியிலுள்ள காந்திஜீயின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்த பின்னர் அகில இலங்கை காந்தி சேவாசங்க நிர்வாக சபை உறுப்பினர்கள் உருவச் சிலையின் முன்னால் நின்று எடுத்த புகைப்படம்.

"எனது வாழ்க்கையே எனது செய்தி"



# காந்தீயம்

இருதிங்கள் இதழ்

காந்தி ஆண்டு 136 (2005 ஜனவரி, 30)

## குடிநீர் வர்த்தகம்

சென்ற இதழில் "நீரை வியாபாரப் பொருளாக்கும் வணிக கலாசாரம்" பற்றிய குறிப்பு வெளிவந்தது.

இந்தியாவில் பல்வேறு பிரதேசங்களில் பாரிய குளிர்பானக் கைத்தொழிற்சாலைகள் தோன்றியதும், அங்கிருந்த மக்கள் நீரின்றி இடம்பெயர்வதும் தொடர் கதையாகிவிட்டது. அடுத்த நாட்டுக் கவலை நமக்கேன்? என்றிருக்க, நம் பிரதேசத்திலும் அதே பிரச்சனை தலைகாட்டியது. சுவிஸ் மினரல் நிறுவனத்தின் விளம்பரங்கள் வீதிச் சுவர்களை நிரப்பின. தொலைக்காட்சியில் இடம்பிடித்தன. நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் அந்த அமைப்பின் உள்ளூர் முகவர்கள் கோலாகலமாக விழா எடுத்து, தமது தொழிலை அங்குரார்ப்பணம் செய்தனர். சுண்ணக்கற்பாறையாலான புவியியல் அமைப்புள்ள யாழ் குடாநாட்டில் நிலத்தடிநீரை உறிஞ்சிவிட்டால், கடல் நீர் உட்புகும் நிலை ஏற்படலாம்.

ஏற்கனவே கமக்காரர் அளவுக்கு மிஞ்சி பம்பிகள் மூலம் நீரை இறைப்பதால் நன்னீர் வழங்கலில் சிக்கல்கள் தோன்றியுள்ளன. இஸ்ரேலிய நிபுணரின் ஆலோசனை பெறப்பட்டும் அது நிறைவேற்றப்படவில்லை. பேராசிரியர் தயா சோமசுந்தரம் உளவளத்தை மட்டுமன்றி, நீர்வளத்தையும் பாதுகாக்கும் எச்சரிக்கை விடுத்தார். சாட்டியில் மணல் அகழ்வால் நகர நன்னீர் வழங்கல் ஆபத்துக்குள்ளாகலாம் எனச் சுட்டிக்காட்டினார். அயற் பாடசாலைகளில் நன்னீர்க் கிணறுகள் உவர்ப்பு ஆகின்றன. நீர்வள, வடிகாற்சபையின் நிபுணரின் அறிக்கை, கல்வித் திணைக்களம் மூலம் பெறப்படுகிறது. கிணற்றுநீரில் சில கனியங்கள் வீதம் கூடியுள்ளது.

யாழ் மாநகரசபை ஆணையாளர் புவியியலாளர் ஆகையால் குடிநீரைப் போத்தலில் அடைக்கும் பாரிய யந்திரக் கைத்தொழிலைத் தடை செய்தார். பத்திரிகைகளில் செய்தி வந்த அடுத்த வாரமே சுவிஸ் மினரல்ஸ் நிறுவன முகவரின் நீண்ட செவ்வி "உதய"னில் வெளியாயிற்று. தென் இலங்கைத் தண்ணீருக்கு யாழ் மக்கள் பணத்தை இறைப்பதைத் தடுக்கும் 'நாட்டுப்' பற்றினால்தான், தாங்கள் பெரும்பொருட் செலவில் பல நாடுகளிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்து விஞ்ஞான முறைப்படி, குடிநீர்வழங்க முன்வந்துள்ளனராம். பழைய கிராமப் பழமொழி ஒன்று: "பிள்ளைதின்றிடும் என்றல்ல, நாய்க்கும் பேய்க்கும் அள்ளி வீசும் என்றதால் தான் சோறிடவில்லை". அந்தக் கதைதான் முகவரின் கதையும்.

நிலக்கீழ் நீரைப் போத்தலில் அடைக்கும் பாரிய கைத்தொழிலின் ஆபத்துப் பற்றி காந்திசேவா சங்கம் பத்திரிகைகளுக்கு எழுதியது. பத்திரிகைகள் மௌனம் சாதித்தன. ஆணையாளரை விசாரித்தபோது, நிறுவனத்தார் பெரிய இடத்தில் ஏற்கனவே 'விளையாடி' விட்டார்கள். சுகாதாரத் திணைக்களத்தினர் 'யாழ்ப்பாணத்தில் நீரால் பரவும் நோய்கள் மாரிகாலத்தில் அதிகரிக்கின்றன; அந்த முறையில் சுத்த நீர் புழக்கத்தை ஆதரிக்கலாம் என்ற ஒரு வசனத்தைச் சொன்னார்கள். ஆகவே ஓராண்டுக்கு நிறுவனத்துக்கு உத்தரவை வழங்கியுள்ளதாக ஆணையாளர் கூறினார்.

யாழ்ப்பாணத்து நிலக் கீழ் நீரை பாதுகாக்க மக்கள் சக்திதான் கிளர்ந்து எழ வேண்டும். ற்சுனாமி வந்த பின் எச்சரிக்கைக் கருவிகள் அமைக்கும் யோசனை செய்வது போல, நீர் உப்பாகிய பின், நீர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றி யோசிக்கும் உயர் அதிகாரிகள் இருக்கும் வரை நாடு உருப்படாது.

# அஹிம்சை நம்பிக்கை

**கலாநிதி : ராதிகா.குமாரசுவாமி**

[இலங்கை – இந்தியசங்கத்தின் 2004ஆம் ஆண்டுக்குரிய காந்தி நினைவுப் பேருரையிலிருந்து தொகுக்கப்பட்டது.]

உலக வரலாற்றில் மிளிரும் அரசியல் புகழ் பூத்தவர்களில் மகாத்மாகாந்தியே எனது அரசியல் சிந்தனைகளில் - நடவடிக்கைகளில் கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியவர். எனது இளம்பருவத்தில் ஒரு சிறிய தகப்பனார் இந்திய தேசிய இயக்கத்தில் பங்குபற்றியவர்; எனக்கு காந்தி பற்றிய உணர்ச்சி பொங்கும் கதைகளைக் கூறினார். எனது பாட்டன், பாட்டிமார் காந்தி யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் வந்த காலத்து நிகழ்ச்சிகளைச் சுவைபட வருணித்தனர். அமெரிக்காவில் பாடசாலை, பல்கலைக்கழகக் கல்வியை மேற்கொண்ட போது மார்ட்டின்லூதர்கிங், ஆபிரிக்க-அமெரிக்கரைத் தம் சுயமரியாதையை மீட்க, காந்தியின் வழியில் நடத்திச் சென்றதைக் கண்ணுற்றேன். நான் வளர்ந்த பின், இலங்கையில் அஹிம்சையின் மௌட்டீகத்தை நேரில் அனுபவித்து, அதை நினைத்துப்பார்க்கவும் விரும்பாத துயர் நிலையை அடைந்தேன். இக்காரணங்கள் எல்லாம் சேர்ந்து என் நெஞ்சத்தில், காந்தி இறந்து ஐம்பது ஆண்டுகள் சென்ற பின்னரும், அவரே அறவழி அரசியலின் நன்மை அனைத்தினதும் வலுமிக்க குறியீடாகத் திகழ்கின்றார்.

காந்தி எதனைக் குறிகாட்டினார்? அதனைச் 'சத்தியாக்கரகம்' என்ற சொல்லே தன்னுள் அடங்கியுள்ளது. புராதன இந்திய சிந்தனையில் சத்(உள்பொருள்) சத்தியம் என்பன உயிர்நாடியானவை. தியாகமும் அறநெறிச் செயல்களும் உண்மையின் தளத்தில் அமையும் போது, நன்மை தரும் சக்திகளை வெளி விடுகின்றன; அதனால் ஆன்மாவும், சமூகமும் புதுமாற்றம் அடைகின்றன. அறநெறி சார்ந்த தியாகம், அறத்தின் சக்தியை உள்ளிருந்து வெளிவரச் செய்கின்றது. அச்சக்தியை பொது நான்மைக்குப் பயன்படுத்த முடியும். சத்தியத்தை 'ஆக்கிரகம்' செய்து அதனைச் சட்டகமாக அமைத்தால் நீதியான சரியான அரசியற் செயற்பாட்டை முன்னெடுக்கலாம். திட்டமிட்டுக் காய்நகர்த்தும் அரசியற் செயற்பாட்டிலிருந்து, அது தூர விலகிநிற்கும். யதார்த்த அரசியல் வாதிகளின் (மக்கியாவல்லிய) அரசியலை புறங்கையால் தள்ளிவிடும். காந்தி அஹிம்சையில் கொண்டிருந்த நம்பிக்கை பயத்தினால் பதுங்கும், விலகி ஓடும் செயல் அன்று; விடாமுற்சியுடன் தீமையை எதிர்க்கும் நடவடிக்கை. அதன் மூலம் எதிரியை அவமரியாதை செய்து கீழே போட்டு மிதிப்பது அல்ல; அவனைத் தன்பக்கம் சேரச்செய்யும்-வழிகோலும் ஆக்கரீதியான சக்திகளை வெளிப்படுத்தி, அழிவுச் சக்திகளை வெளிவரவிடாது அமுக்குவதே அவர்பாதை (தனிமனித, சமுதாய), உருமாற்றத்திற்கு அவர் அன்பின் சக்தியைப் பயன்படுத்தினார். வெறுப்பின் சக்தியைத் தலைதூக்க விடாது பார்த்துக் கொண்டார். அவரது அரசியலில் சமூக நீதி உள்நிறைந்திருந்தது. துறவுப்போக்குடனும், தியாக சிந்தனையுடனும் அவர் நடத்திய அரசியல் ஆக்க ரீதியான உடன்பாட்டு ரீதியான சக்திகளைத் தூண்டி, அவற்றை உருமாற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் பயன்படுத்தியது.

அஹிம்சை, அஹிம்சை வலுவுக்குத் தடையாயிருப்பதுடன், நம் சமூகத்திலுள்ள உடன்பாட்டு ரீதியான, இயங்கியல் சார்ந்த, ஆக்கசக்திகளைப்

பலமுறச்செய்யும். ஹிம்சை வழியில் அரசியல் போராட்டம் நடைபெற்றால் அழிவுச் சக்திகளின் பலம் அத்கரிக்கும் அதனால் வருங்காலத்தில் மனிதப்பண்பார்ந்த சமுதாயத்தை – ஒவ்வொருவரினதும் மனித உரிமைகளை மதிக்கும் சமுதாயத்தை கட்டி எழுப்புவது மிகக் கடினமாகும்.

கமலா பாசின், ரிது மேனன் போன்றவர்கள் 1947ல் நிகழ்ந்த இந்திய உபகண்டப் பிரிவினையின் போது ஏற்பட்ட கொடூரங்களை மிக அதிகமாக அனுபவித்தவர்கள் பெண்களே என விரிவாக எழுதியுள்ளார்கள். எந்த நாட்டிலும், போர், உள்நாட்டு யுத்தம் எது வந்தாலும் மிகக்கடுமையாக பாதிக்கப்படுபவர்கள் பெண்களே. கொடிய பகைவர் மட்டுமன்றி, தந்தை, சகோதரர் கூட, (பெண்களின்) குடும்பமானத்தைக் காக்க என்று அவர்களைக் கொலை செய்தனர்.

இலங்கையில் 80,000 பேர் போரால் விதைவைகளாயினர் என்பர், தெற்கே ஜே.வி.பி. யின் ஆயுதப் போராட்டத்தினால், ஒரு பெற்றோர் உள்ள குடும்ப எண்ணிக்கை அதிகரித்தது. இவ்விடயங்கள் தொடர்பாகப் பல ஆய்வுகள் வெளிவருகின்றன. கானாமற் போனோர். எண்ணிக்கையும் துயரமும் பெருகுகின்றது. நீதியான - மத்தியகால விதிகளுக்குட்பட்ட போராட்டம் இல்லாத நவீன உலகில் போர்கொடுமைகளைக் கணக்கிட முடியாது.

இங்கு இரு இனத்தவர்களும் வேறுபாடுகளைக் களைவதற்கு அகிம்சாவழியைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டனர். தமிழ்த் தேசியவாதிகள் தம்மக்களின் உரிமைகளைப்பற்றிப் பேசினார்கள், சிங்கள அரசியல்வாதிகளுடன் பொதுமக்களிடத்து நம்பிக்கை வைத்து, அவர்கள் உள்ளத்தில் தம் உரிமைக் குரலின் நியாயத்தை பதியச்செய்யத் தவறிவிட்டனர்.

மகாத்மாவின் உபதேசங்களே இக்காலகட்டத்தில் எமக்கு ஊன்றுகோலாகும். சர்வதேச அரசியல் மேலாண்மை, பிரதேச தலைமைத்துவம், போர்க்கருவிகள் உற்பத்தி நிறுவனங்கள், அவற்றின் ஏஜன்டுகள் என்று எம்மைத் தலை நிமிரவிடாமல் செய்யம் தீய சக்திகளுக்கு எதிராக, மக்களின் மனவடுவை மாற்றி ஆக்கரீதியான நல்ல சிந்தனைகளைத் தூண்டும் வலுவை விருத்திசெய்ய வேண்டும்.

(முழுக்கட்டுரையும் படிக்கத்தக்க சிறப்பு வாய்ந்தது)

நன்றி.

**Daily News, November 16,18,2004**


# காந்தீயம்

**இரு திங்கள் இதழ்.**

*சந்தா விபரம்:-*

தனிப்பிரதி ரூபா 10 /=

ஆண்டுச் சந்தா ரூபா 100 /=

(தபாற் செலவு உட்பட)

சந்தாப்பணத்தைக் காசுக் கட்டளையாக அனுப்ப விரும்புவோர். யாழ்ப்பாணம் தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக பணம் பெறுபவர். சோ.க. தம்பிப்பிள்ளை எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

முகவரி :-

171 முதலாம்
அகில இலங்கை காந்தி சேவாசங்கம்
குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

**புதிய அங்கத்தவர்கள்**

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் புனரமைக்கப்பட்ட பின்னர் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் புதிய அங்கத்தவர்கள் சங்கத்துடன் இணைந்து வருகின்றார்கள். பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலிருந்து சங்கத்தில் இணைந்துகொண்ட மாணவ அங்கத்தவர்களில் ஒரு பகுதியினரின் பெயர்கள் வருமாறு:

1. கிருஷ்ணபெருமான் ஜெனத்மேனன்
2. மனோகரன் ரமணன்
3. பாலசுரப்பிரமணியம் ஜெயப்பிரகாஷ்
4. இரவீந்திரன் நிர்மல்
5. சட்டநாதக் குருக்கள் யோகசம்பந்தர்
6. தர்மராஜா தனஞ்யன்
7. தர்மலிங்கம் ராஜ்குமார்
8. தர்மகுலசிங்கம் மயூரன்
9. கணபதிப்பிள்ளை மாதீபன்
10. ஜேக்கப் ராஜ்குமார் தினேஸ்வரன்
11. யோகராசா கலைமோகன்
12. ரவீந்திரநாதன் நிரோஜன்
13. ஜெயபாலன் திருவரங்கன்
14. வெற்றிவேலாயுதம் கிருஷ்ணா
15. அருள்சீலன் ஜோர்ச் வாசிங்டன்
16. உதயசங்கர் அபிரேசன்
17. ஆனந்தராசா சச்சிதானந்தன்
18. வன்னியசிங்கம் சிறீகரன்
19. ஜெயராசா சஞ்சீவன்
20. சந்திரதாஸ் லக்ஷ்மணதாஸ்
21. சிவானந்தராசா குருக்கள் சுதர்சன்
22. சீவரத்தினம் ஐங்கரன்
23. சிவபாலசிங்கம் நிர்மலன் சிவலிங்கன்
24. திருச்செல்வம் சிவதேவன்
25. பாலசிங்கம் ஜெனகன்
26. சர்வானந்தம் டிலீப்குமார்
27. சண்முகரத்தினம் அச்சுதன்
28. ஜீவதாஸ் தர்சன்
29. துரைசிங்கம் மலைமகன்
30. சோமஸ்கந்தராஜா கிரிதரன்
31. தவராசா சுபேஸ்
32. தேவராசா இருதயநாதன்
33. துரைசிங்கம் துசந்திரன்
34. சச்சிதானந்தன் நிசாந்தன்
35. ரவீந்திரநாதன் பிரணவன்
36. நந்தகுமார் நிரோஜன்
37. கங்காதரன் கௌசிகன்
38. நடராஜா சஜீவன்
39. சிவபாதராஜா தினேஸ்
40. சகுந்தரராஜா விஜயேந்திரன்
41. யோகநாதன் இராகவன்
42. எட்வேட் மரியதாஸ் அன்ரன் தொம்சன்
43. அருமைத்துரை றெனிபேட்
44. அருளானந்தன் அரவிந்தன்
45. அரசலிங்கம் கஜன்
46. இருதயதாஸ் நிருபன்
47. சிவானந்தச் செல்வன் ஜெயந்தன்
48. திருஞான ஸ்ரீபன் ஸ்யஸ்சிளைவ்
49. ரவிச்சந்திரன் நிரோஜன்
50. பாலசிங்கம் சத்தியேந்திரா

காந்திய இலட்சியங்களோடு நாட்டிற்கு வேண்டிய ஆக்கவேலைகளைச் செய்து வருங்காலத்தில் மக்களிடையே சத்தியத்தையும் அன்பையும் சமாதானத்தையும் நிலைபெறச்செய்யும் நோக்கில் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை காந்திசேவா சங்கம் சமீபகாலமாகப் புதுத்தெம்புடன் செயற்படத் தொடங்கியுள்ளது. சங்கத்தின் அமைப்புக்கும் பிரமாணங்களுக்கும் ஏற்ப சங்கத்துடன் தம்மை இணைத்துக் கொள்ள விரும்புவோர் சங்கத்தின் புதிய அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தொடர்புகளுக்கு:-

அகில இலங்கை காந்தி
சேவாசங்கம்,
171 முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

# ஆசிரம சகோதரிகளுக்கு மகாத்மாவின் இலங்கைக் கடிதங்கள்

மகாத்மாகாந்தியை நேரில் சென்று இலங்கைக்கு அழைத்தவர், பின்னாளில் எம்சங்கத்தின் முதலாவது தலைவர் வாலண்டி பேரின்பநாயகம் அவர்களே 1927இல் காந்தியடிகள் இலங்கையில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அப்போது அவர் எழுதிய இருகடிதங்கள் இங்கே தரப்படுகின்றன. அவரது செயலாளர் மாதேவதேசாய் எழுதிய "காந்தி ஜீயுடன் இலங்கையில்" என்ற நூலில் தொகுக்கப்பட்டது. மொழி பெயர்ப்பு "சர்வோதயம்" (தஞ்சாவூர்) மலர் 10 இதழ் 09 இல் (1957) வெளிவந்தன.

I கொழும்பு, 14-11-1927

**சகோதரிகளே,**

நாங்கள் சனிக்கிழமை கொழும்பை அடைந்தோம். உங்களிடமிருந்து கடிதம் வருமென்று எதிர்பார்த்தேன். ஆனால் இன்று (திங்கட்கிழமை) வரையில் வரவில்லை.

இந்த நாடு மிகவும் ரமணியமாய் இருக்கிறது. இந்தியாவுக்கு வெளியிலிருந்தும் இங்கு இந்தியாவைப்போலவே தோன்றுகிறது. தென்னாட்டு மக்களே இங்கு அதிகம் வசிக்கிறார்கள். அவர்களுக்கும் இந்நாட்டு மக்களுக்கும் அதிக வேற்றுமை இருப்பதாகவே தோன்றவில்லை. இங்கே பெண்களின் ஆடை எளிமை பொருந்திய தாயிருக்கிறது. ஆண் பெண் இரு பாலாரின் ஆடைகளும் ஏறக்குறைய ஒன்றென்றே சொல்லலாம். இருவருமே வஸ்திரம் அணிகிறார்கள். அது சுரேந்திரன் அணிவது போன்றுள்ளது.

ஆனால் இவ்விடத்திய வஸ்திரங்கள் சாயம் தோய்த்தவையாயும் பல வகையினவாயும் இருக்கின்றன. உடலின் மேல் பகுதியிலோ இருபாலாரும் "பண்டி" அணிகிறார்கள். ஆனால் இருவகை பண்டிகளிலும் சிறிதே வேற்றுமை இருக்கிறது. பெண்கள் பண்டியில்லாமல் ஒருபொழுதும் இருப்பதில்லை ஆடவரோ பெரும்பாலும் இடை வஸ்திரத்தோடு இருந்துவிடுகிறார்கள்.

மலையாளத்திலும் ஏறக்குறைய இதே மாதிரியான ஆடையே அணியப்படுகிறது. ஆனால் அங்கே வஸ்திரங்களில் சாயம் தோயாதிருப்பதே வித்தியாசம். இந்தத் துணிகள் மிகவும் மலிவாய் கிடைக்கக்கூடும். இரு பிரதேசங்களிலும் மக்களுக்கு கதரினிடம் பற்று தோன்றிவிடுமாயின், அதை உடுத்துவதில் சிரமம் எதுவுமே இருப்பதற்கில்லை.

மௌன தினம்.

பாபுவின் ஆசிகள்

✡

எங்கு போனாலும் மகாத்மா சபர்மதி ஆசிரம சகோதரிகளை மறப்பதில்லை. இலங்கைப் பெண்களின் உடையில் தாம் கண்ட எளிமையையும் அழகையும் வர்ணித்து இந்தியப் பெண்களின் ஆடம்பர அலங்காரங்களை எவ்வளவு ஹாஸ்யத்துடன் கண்டிக்கிறார்!

**கடிதம் - II**

சகோதரிகளே,

உங்களிடமிருந்து இந்தத் தடவை இதுவரையில் கடிதம் கிடைக்கவில்லை. இலங்கையில் அதிகமாகச் சுற்றவேண்டியிருப்பதால் கொழும்பிலிருந்து கடிதம் உடனே கிடைப்பதற்கில்லை.

இலங்கையின் பெண்களைப் பார்க்கையில் அடிக்கடி ஆசிரமப் பெண்களின் நினைவு வருகிறது. பெண்களின் ஆடை எளிமை பொருந்தியதாயிருக்கிறது என்று ஏற்கெனவே எழுதிவிட்டேன் ஆனால் பெரிய வீட்டுப்பெண்கள் அலங்கார ஆடம்பரங்களைக் கணக்கின்றி பெருக்கிக்கொண்டிருப்பதால் அவர்களின் உடம்பில் பட்டு, ஜரிகை ஆகியவைகளைத்தவிர வேறு எதையுமே காணோம். இது சிறிதும் அழகாயில்லை என்பது என் அபிப்பிராயம். பெண்கள் இந்த ஆடைகளை யாருக்குக் காட்ட, அல்லது யாரை மகிழ்விக்க, அணிகிறார்கள்? என்று நான் என் மனதையே கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கே கோஷா முறை அறவே இல்லை.

பெண்கள் அலங்காரங்கள் செய்துகொண்டு அழகுபடுத்திக் கொள்ளுகிறார்களே, அவையெல்லாம் எதற்கு? இந்தக் கேள்விக்கு என்னைவிட நீங்கள் நன்றாக பதில் சொல்லக்கூடும். ஆனால் இவையெல்லாவற்றையும் பார்க்கையில் ஆசிரமத்தில் கூடியவரையில் குறைவாக அலங்காரம் செய்துகொள்ளும் பழக்கம் ஏற்பட்டிருப்பது நல்லதென்றே தோன்றுகிறது. ஆசிரமத்தில் அலங்காரங்களே செய்து கொள்ளுவதில்லை என்பதை என் மனம் ஒப்பவில்லை உங்கள் மனம் ஒப்புகிறதென்றால் சொல்லுங்கள்.

பாபுவின் ஆசிகள்

## மில்க்வைற் வெளியீடு

மில்க்வைற் தொழிலகம் தொடர்ந்து அறப்பணியாற்றி வருகிறது. சிவநேயர் இ. தவகோபால் சமீபத்தில் தைப்பூசம் அன்று நித்திய கரும விதி என்ற நூலினை இலவசமாக வெளியிட்டதுடன், அன்றைய தினம் ஏடு தொடக்கிய பிள்ளைகளுக்கென அரிச்சுவடி ஏடுகளும் வழங்கினார்.

**"கன்றும் கனியுதவும்"**

## அகவிழி

நமது கல்விசார் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள், கல்வி முகாமைத்துவ பகுதியினர், கல்வி அபிவிருத்தி பகுதியினர் ஆகியோரது தொழின்மைப் பண்புகளை விருத்தி செய்யும் நோக்கில் அகவிழி என்னும் சஞ்சிகை கொழும்பிலிருந்து வெளிவருகிறது. கல்வியில் ஆர்வமுள்ள அனைவரும் படிக்க வேண்டிய இதழ் அகவிழி

## கல்வியியலாளன்.

புலமைத்துவம் சார்ந்த இறுக்கமான கட்டுரைகளைத்தாங்கி வெளிவந்துகொண்டிருக்கும் சஞ்சிகை கல்வியியலாளன் பா. இராஜேஸ்வரன் ந.திருவாசகன் ஆகியோர் இதழாசிரியர்களாக இருந்து யாழ்ப்பாணம் கல்வியியல் வெளியீட்டு நிலையம் சார்பாக கல்வியியலாளன் சஞ்சிகையினை வெளியிடுகின்றனர். கல்வித்துறையில் நீண்ட நாள் அனுபவமும் ஆய்வு வல்லமையும் கொண்ட பேராசிரியர்களது கட்டுரைகள் உட்பட சமீபத்திய இளம் கல்வியாளர்களது கட்டுரைகள் வரை பல தரமான கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் கல்வியலாளன் சஞ்சிகை நமது கல்விநிலை மட்டத்தை தரம் உயர்த்தும்

இப்பத்திரிகை 171, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக 2005ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் திகதி பரமேஸ்வராச் சந்தி, அம்பாள் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதழாசிரியர். தி. உதயசூரியன்